# சோ. தர்மன் புதினங்களில் நாட்டுப்புறத் தெய்வங்கள்

# Folk Deities in Cho. Dharman's Novels

***சு. கா. சுந்தரவதனி***
எம். ஜி. ஆர். கல்லூரி, ஒசூர், இந்தியா

**S. K. Sundaravalli**
*M. G. R. College, Hosur, India*

***த. லட்சுமி***
நெறியாளர் & உதவிப்பேராசரியர்
தமிழாய்வுத்துறை
எம். ஜி. ஆர். கல்லூரி, ஒசூர், இந்தியா

**T. Lakshmi**
*Research Supervisor & Assistant Professor*
*Department of Tamil*
*M. G. R. College, Hosur, India*

**Citation**: Sundaravalli, S. K., and T. Lakshmi. "Folk Deities in Cho. Dharman's Novels." *Journal of Tamil Culture and Literature*, vol. 4, no. 4, 2025, pp. 48-53.

CC BY SA

*https://doi.org/10.5281/zenodo.20053712*

***ஆய்வுச் சுருக்கம்***

*இக்கட்டுரை சமகால தமிழ் எழுத்தாளர் சோ. தர்மனின் புதினங்களில் சித்தரிக்கப்பட்டுள்ள நாட்டுப்புறத் தெய்வங்களை ஆராய்கின்றது. நாட்டுப்புறத் தெய்வம் என்பது வெறும் பொருள் அல்லாமல் மனித இருத்தலின் குறியீட்டு வெளிப்பாடாகும் என்ற அடிப்படையில் இவ்வாய்வு அமைகின்றது. இசக்கியம்மாள் (கொலையுண்ட அல்லது தற்கொலை செய்துகொண்ட பெண்களின் தெய்வம்), போத்தியம்மன் (மானம் காக்க உயிர் நீத்த கன்னியின் தெய்வம்), கோமதியம்மாள் (சிவ-விஷ்ணு ஐக்கியத்தின் அடையாளம்) போன்ற பெண் தெய்வங்களும், சித்தன் (சித்தர் மரபைக் குறிக்கும் தெய்வம்), உளிக்கருப்பன் (நடுகல் வழிபாட்டின் தெய்வம்) போன்ற ஆண் தெய்வங்களும் விரிவாக ஆராயப்பட்டுள்ளன. இத்திராவிட தெய்வங்கள் பெரும்பாலும் பெண் தெய்வங்களாகவே காணப்படுவதையும், இவை தமிழக கிராமிய பண்பாட்டின் வெளிப்பாடுகளாக விளங்குவதையும் இவ்வாய்வு குறிப்பிடுகின்றது. சோ. தர்மன் தமது புதினங்களில் இவ்வகை நாட்டுப்புற வழிபாட்டு முறைகளை வரலாற்று மற்றும் சமூகவியல் நோக்கில் பதிவு செய்துள்ளார் என்பது இவ்வாய்வின் முடிவாகும்.*

***குறிச் சொற்கள்:*** *நாட்டுப்புறத் தெய்வங்கள், பெண் தெய்வ வழிபாடு, திராவிட மரபு, கிராமிய பண்பாடு, சமகால தமிழ் இலக்கியம், முன்னோர் வழிபாடு*

## Abstract

*This research article examines the representation of folk deities in the novels of contemporary Tamil writer Cho. Dharman. The study argues that folk deities are not mere objects but symbolic expressions of human existence, encompassing various elements such as form, mythological narratives, songs, rituals, worship practices, celebratory events, aesthetic expressions, and customs. The paper analyzes several significant folk deities portrayed in Cho. Dharman's works, including female deities like Isakiyammal (associated with women who died violently or by suicide), Pothiyammal (a deity born from protecting honor against feudal oppression), Gomatiyammal (representing the fusion of Shiva and Vishnu), and male figures like Sitthan (representing the Siddhar tradition) and Ulik Karuppan (a memorial deity for those who died violently). The study concludes that these Dravidian deities, predominantly female, reflect the folk life and cultural practices of Tamil rural communities, serving as deified ancestors who continue to influence contemporary social life.*

***Keywords**: Folk Deities, Tamil Literature, Cho. Dharman, Female Deities, Tamil Culture, Dravidian Traditions, Rural Folklore, Memorial Worship, Ancestor Veneration, Contemporary Tamil Fiction*

**முன்னுரை**

*நாட்டுப்புறத் தெய்வம் என்பது ஒரு பொருள் இல்லை அது மனித இருத்தலின் குறியீட்டு வெளிப்பாடாகும். நாட்டுபுறத் தெய்வத்தின் இழைகளான உருவம், தொன்மக் கதை கதைப் பாடல், நிகழ்த்துதல் வழிப்பாட்டுச் சடங்கு முறைகள், களிப்பு நிகழ்வுகள் அழகியல் வெளிப்பாடுகள் பழக்க வழக்கங்கள் ஆகிய அனைத்தும் மனித இருத்தலின் குறியீட்டு வெளிப்பாடாகும். இவ்விருத்தலின் குறியீட்டு அடையாளமாக நாட்டுப்புறத் தெய்வங்கள் திகழ்கின்றன. அந்நாட்டுப்புறத் தெய்வங்களைக் குறித்து சோ. தருமன் புதினங்களின் வழி ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.*

**நாட்டுப்புற தெய்வங்கள்**

*குறளனும், கூனனும் காதல் செய்யும் சாட்சியைக் குறிப்பிடும் போது கோவிலைப் பற்றி ஒரு சில குறிப்பை கலித் தொகை (கலி. 29) தருகிறது. அகநானூற்றுப் பாடலில் (அகம் 307) கடவுளின் வடிவம் ஓவியமாக வரையப்பட்டிருந்தது. குறிக்கப்பட்டிருக்கிறது சங்க கால மக்கள் பல தெய்வத் தொகுதியில் நம்பிக்கை உடையவர். இத்தெய்வங்களைவ வணங்கிய மக்களின் பண்புகளுக்கும் இத்தெய்வங்களுக்கும் தொடர்பு உண்டு இயற்கை பரப்பை இயக்கி ஆட்கொள்ளும் தனி வழியை நோக்கி தங்கள் வழிப்பாடுகளை ஆற்றி வந்தனர்.*

*சிறு தெய்வங்கள் மிகப்பழைய நம்பிக்கைகளையும் உணர்வுகளையும் பேணி நிற்பவையாகும் இச்சிறு தெய்வங்களுக்குப் பூசை செய்வதற்கு பிராமணர் கல்லாதோர் பூசாரிகளாக இருப்பர். பெரும்பாலும் இக்கோயில்களில் இரத்தப் பலியிடுதல் நடைப்பெறும். இக்கோயில் திருவிழாக்களில் சாமியாட்டம் இருக்கும் மேற்கண்ட சிறு தெய்வ வழிபாட்டு முறைகளை சோ. தர்மன் அவாக்ள் தமது புதினங்களில் விரிவாக பதிவு செய்துள்ளார்.*

*பெண் தெய்வ வழிபாடு மிகப் பழமையானது பண்டையத் தமிழ் இலக்கியங்கள் முதியோன், பழையோன் குறிப்பிட்டுள்ளன. சோ. தர்மன் அவர்கள் தாம் வாழும் பகுதிகளில் உள்ள பெண் தெய்வங்களைப் பற்றி தமது நாவல்களில் எடுத்தியம்புகின்றார். இவர் குறிப்பிட்டுள்ள தெய்வங்கள் கீழ்வரும் பகுதியில் ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளது.*

**இசக்கியம்மாள்**

*இசக்கியை இயக்கி என்பர் யட்சி என்ற வட சொல்லின் திரிபு சாத்தனாரின் இரண்டு பணியாளர்களில் ஒருவர் என்றும் கூறுவர். வையாபுரிப்பிள்ளையின் அகராதியில் இசக்கி என்றால் துர்க்கா பேதம், யட்சப்பிள்ளையின் அகராதியில் இசக்கி என்றால் துர்க்கா பேதம், யட்சப் பெண், தர்மதேவதை என்றாலும் இன்று அனைவராலும் வணங்கப்படுகிறாள் கொலையுண்ட பெண்கள் அல்லது தற்கொலை புரிந்து கொண்ட பெண்கள் இசக்கி ஆகின்றனர்.*

*இசக்கியம்மன் கோவில்கள் தமிழ்நாட்டில் பல இடங்களில் உள்ளது. பழவூர் கன்னியாகுமரி சாலையில் கருங்குளம் உள்ளது. இங்கும் இசக்கியம்மனுக்கு கோவில் உண்டு நாகர்கோவில் திருவனந்தபுரம் சாலையில் பார்வதிபுரத்தில் இந்த அம்மனுக்கு கோயில் உள்ளது. ஒரு காலத்தில் புன்னை மரக்காடு இதனைப் பஞ்சவக்காடு என்றும் அழைத்தனர். இந்த நடுக்காட்டில் இசக்கி இருந்ததால் நடுக்காட்டில் இசக்கி என அழைக்கப்பட்டாள். குமரி மாவட்டத்தில் பருத்திவாளை என்ற கிராமம் உள்ளது. இங்கு குலை வாழை இசக்கி அம்மனுக்கு கோயில் உள்ளது அதே போன்று மேலங்கோட்டிலும் இசக்கியம்மனுக்கு கோயில் உண்டு.*

*பெண் தெய்வங்களைக் கன்னி என்றும் முதியவள் என்றும் கூறுவது மரபு. ''கருதறிய கடலாடை உலகு பல.... கருப்பமாய் பெற்ற கன்னி'' என மலைமகன் கதைப்பாடல். கன்னி இசக்கி வாறாளே என்றும் பஞ்சுதலை நரைத்த இசக்கி என்றும் கூறும் இசக்கியம்மன் எனும் பெண் தெய்வத்தையும் இந்த அம்மன் வீற்றிருக்கும் கோவில் பற்றியும் கோவிலில் இருக்கும் கிணறு மற்றும் செடிகள் குறித்தும் விரிவாகக் கூறுகின்றார் சோ. தர்மன் அவர்கள் இதனை. படர்ந்த புளியமரத்துக்கு அடியில் இருக்கும் இசக்கியம்மனின் பீடத்திற்கு முன்னால் தீபம் எரிந்து கொண்டிருந்தது. ரோட்டில் செல்லும் பெரும்பாலான வாகன ஓட்டிகள் இசக்கியைக் கையெடுக்காமல் போவதில்லை. எதிரே இருக்கும் பன்னிரெண்டு சுடுகாட்டு பேய்களும் இசக்கியம்மனிடம் மண்ணைக் கவ்வ வேண்டும் என்பான் அரியன், இசக்கிக் கோவில் தொலா கிணற்றில் தண்ணீர் இறைத்து யாரும் குளிக்காமல் கல் தொட்டிகளில் தண்ணீர் பாயும் இடத்தில் கும்பலாகப் பதியமிட்டுள்ள அரளிச் செடிகளில் செல்வஸிப் பூக்கள் பூத்துச் சொரிந்து கிடக்கும் இசக்கியின் கண்கள் ஒளிரும் தீபம் எனும் கூற்றில் காணலாம். இதில் பேய்கள் இசக்கியம்மனைக் கண்டு அஞ்சும் என்பதையும் கோயில் கிணற்றில் சாதி பேதமற்று யார் வேண்டுமானாலும் குளிக்கலாம் என்றும் இசக்கிம்மனுக்கு உகந்த மலர் செ ல்வராணி என்றும் குறிப்பிடக்காணலாம்.*

*இசக்கியம்மன் கோயிலில் நிறைய பேர் குளித்துக் கொண்டிருந்தார்கள். செல்வரளிப் பூக்கள் நுணிப்பால் பூத்து சொரிந்திருந்தன. சுசுல ஆடுகள் கோயிலைச் சுற்றித் திரிந்தன. ஜடாமுடி பெண் கோயிலுக்கு முன் சம்மணமிட்டு உட்கார்ந்திருந்தார். என்பதிலும் இசக்கியம்மன் வீற்றிருக்கும் கோயில் கட்டப்படுகிறது. பல்வேறு உயிரினங்களுக்கு ஆதரவை நல்குபவள் இசக்கியம்மன்.*

*அண்டங்காக்கைகள் கூட்டம் இசக்கியம்மன் கோயில் வேப்பமரத்திலும், அரச மரத்திலும் அடைந்து கிடந்தன. குளிர்ந்த தண்ணீர் பெருகும் ஆரளிச் செடிப் பதியத்திற்கு அடுத்த இடத்தில் மேலெல்லாம் சகதியோடு புரண்டு கொண்டிருந்தன ஏழெட்டுப் பன்றிகள் இருந்தன. இடக்கியம்மன் கோயிலைச் சுற்றியுள்ள மரங்களில் காக்கைகளும் கோயிலில் உள்ள அரளிச் செடி நிழலில் பன்றிகளும் இருப்பதை ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார்.*

**போத்தியம்மன்**

*எட்டையபுரம் மகாராஜாக்கள் மரியாதைக்கு உரியவர்கள் நெல்லைக் கொட்டியளக்கும் போது ஏழுக்கு பிறகு எட்டு என்று சொல்லாமல் ''மகாராஜா'' என்று தான் இங்குள்ள மக்கள் எண்ணுவார்கள். அவ்வளவு பயம் கலந்த மரியாதை அவரிடம் ராஜா வேட்டைப் பிரியர் ஒரு முறை வேட்டைக்குப் போகும் போது 13 வயது இளம் பெண்ணைப் பார்த்து ஆசை கொண்டு அவளை அடைய எண்ணி ஆள் அனுப்பினார். அவளது பெற்றோர் பயந்து பெண்ணைத் தர விருப்பமில்லை. வீட்டுக்கு வெளியே குழியைத் தோண்டிப் புதைத்தனர். இரவோடு இரவாக கீழக் கரைக்குப் போய்விட்டனர். குற்ற உணர்வு தாங்காமல் மீண்டும் வந்து மண்யத்தை கட்டி வழிபட்டனர். கும்பாபிஷேகம் நடத்திக் கும்பிட்டனர். இதுவே போத்தியம்மனின் தோற்றக் கதை. மேற்கண்ட கதையை சோ. தர்மன் அவர்களும் விரிவாகச் சுட்டுகின்றனர். தங்க ஆபரணம் செய்யும் பொற்கொல்லர் ஒருவரின் குடும்பத்தைப் பொண்ணான போத்தியம்மாள் மீது எட்டயபுரம் ஜமீன் ஆசைப்படுகிறான். இதற்கு உடன்படாத பொற்கொல்லர் குடும்பத்தார் ஜமீனை பகைத்துக் கொண்டு இனி வாழமுடியாது மானம் இழந்தும் வாழ முடியாது. அதனால் போத்தியம்மனை வீட்டிற்குள்ளேயே குழி தோண்டிப் புதைத்து விட்டு ஊரை விட்டே வெளியேறுகிறார்கள் இவன் பின்னாளில் போத்தியம்மாளாக வழிப்பட்டாள்.*

ஜமீன்தாரின் உத்தரவுப்படி போத்தியம்மாள் அரண்மனைக்கு அழைத்துவரப்பட வேண்டும் என்பதையும் ஒடுக்கப்பட்ட பெண்கள் ஆதிக்க நிலையிலுள்ளோரால் பலியாக்கப்படுவதையும்

“போத்தியம்மாள் குளித்து முடித்து ஈரக் கூந்தல் புட்டம் தொட வாசலில் நின்று சிக்கெடுத்துக் கொண்டிருக்கிறாள். விலக்கிப் பார்த்த ஜமீனுக்கு முதல் வேட்டை போத்தியம்மாள். தங்க ஆபரணங்கள் செய்யும் பொற்கொல்லர் குடும்பத்துப் பெண் ஜமீன் உத்தரவு நாளை இரவு அரண்மனைக்கு வர வேண்டும் என்று....” என்னும் வரிகளில் உணர்த்துகின்றார் சோ. தர்மன் அவர்கள்.

மானம் காக்க தன் மகளையே கொன்று புதைத்தனர். பொற்கொல்லர் குடும்பத்தினர் தன்மானம் காத்த அந்த கன்னியை கடவுளாக வழிப்படுவதை “வீட்டுக்குள்ளேயே நிலவரை தோண்டி போத்தியம்மாளை உள்ளே இறக்கி மூடிவிட்டு தன் பிள்ளை குட்டிகளுடன் கீழக்கரையில் போய் வாழ்கிறார். பொற்கொல்லர் தன்மானம் காத்த பெருமை தன் குலம் காத்த பெருமை.... போத்தியம்மாள் பொற்கொல்லர்கள் குல தெய்வமாகி இன்று அன்றாடம் ஆயிரம் பேர் வழிப்படும் தெய்வமாகி நிலவரை இருந்த இடம் கோயிலாகி மக்களால் இன்றும் வழிப்படப்படுகிறது” என்ற கூற்றில் காட்டுகிறார் ஆசிரியர்.

**கோமதியம்மாள்**

சிவபெருமான் உமையவளைப் பார்த்து பார்வதி தவமிருந்து என் இடபாகத்தைப் பெற்ற நீ, சிவனும் சக்தியும் ஒன்றே என்ற தத்துவத்தை உலகிற்கு உணர்த்தினாய் அதே போல் ஹரியும் நானும் ஒன்றே என்ற தத்துவத்தை உலகிற்கு உணர்த்திட வேண்டி நீ மீண்டும் தவம் மேற்கொள்வாயாக தென்திசை மேவும் புன்னை வனம் என்னும் நலடல வனம் செயல்யாம் அங்கே உணர்த்துவோம் என்று அன்பு கட்டளையிடுகிறார். ஆகிலாண்டகோடி பிரமாண்ட நாயகன் இடது பக்கத்திலே நாராயணனைக் கொண்டு சங்கர நாராயணனனாகக் காட்சியளித்தார். அம்பிகைக்கு ஆட்சியளித்தார் ஆடித் தவமிருந்த அன்னை பராசக்தி கண் விழித்து சங்கர நாராயணனின் திருக்கோலம் கண்டாள். “சங்கரி” இந்தப் புன்னை வனத்தில் புனிதம் அடைந்தது. இந்தக் கர்க்கடக மாதத்தில் தவமிருந்த உன்னால் இத்தலத்திற்கு கோமதி என்ற நாமம் வழங்கட்டும் என்று சொன்னார் சங்கரன்.... புன்னை வனத்தில் சிவனும், விஷ்ணுவும் சங்கர நாராயணராகவும் சிவன் சங்கரலிங்கப் பெருமானாகவும், பார்வதி கோமதியாகவும் எழுந்தருளி களியுகத்தில் நமக்குப் பேரருள் புரிகின்றனர்சு.

கோமதியம்மன் வழிப்பாட்டால் பல்லி, பூரான் போன்ற உருவ பொம்மைகளை காணிக்கையாக செலுத்தும் முறை நடைமுறையில் உள்ளதையும் இந்த அம்மனை நம்பினோர் கைவிடப்படமாட்டார்கள் என்பதையும் குறிப்பிடுகின்றார். சோ. தர்மன் அவர்கள் மடைக் குடும்பன் நடந்து வரும் போது கண்ணாடி விரியன் பாம்பு தென்பட ஒரு நூலிழையில் பாம்பிடமிருந்து தப்பிக்கிறான் இதற்கு காரணம் சங்கரன் கோயில் கோமதி அன்னையே என்றும் தன்னைக் காப்பாற்றிய கோமதி அம்மனுக்கு நேர்த்திக்கடன் செலுத்துவதென முடிவு செய்கிறான் மடைக் குடும்பன் இதனை ‘ம அந்த சங்கரன் கோயில் கோமதி ஆத்தா தான் என்னைக் காப்பாத்தனது போன வருசம் ஆடித் தவதற்கு போகல ஆத்தா அடிச்சி காட்டிடா, இந்த வருசம் போயி உருவம் வாங்கிப் போனும் நேத்தே நேமிக்கம் போட்டாச்சுசு என்ற கூற்றில் காணலாம்.

**சித்தன்**

இந்திய வரலாற்றில் சித்தர் மரபு மகாயனத்தைத் தொடர்ந்து உருவான தாந்திரிக பௌளக்கத்திலிருந்து உருவானது அது வஜ்ராயனம் என்றும் அமைக்கப்பட்டது. கி.பி. 6 ஆம்

*நூற்றாண்டுக்குப் பிறகு 84 சித்தர்கள் மரபு உருவானது. ராகுல சாங்கிருத்தியன் 84 சித்தர்களைப் பட்டியலிட்டுள்ளார் தமிழகத்தில் 18 சித்தர்கள் என்று மரபே பேணப்பட்டது வஜ்ரமான சித்தர்களின் அறிவும் ஆற்றலும் சமூகத்திற்கு பயன்படக் கூடியதாக அமைந்தது இதனால் இவர்களுக்கு கோவில் கட்டி வழிபாடு நடத்தும் போக்கு உருவானது அது போன்ற ஒரு சித்தன் கோயிலைப் பற்றி சீனிக்கிழவன் மூலமாக சோ. தர்மன் அவர்கள்.*

*சீனிக் கிழவன் "தெற்கதமல் நடந்தவன் இடிந்து கிடக்கும் சித்தன் கோயில் முன்னால் வந்து நின்றான் கோயிலின் பாதிச்சுவர்கள் இடிந்தும் சுவர்களின் மீது செடிகள் முளைத்தும் சி தைந்து கிடப்பதைக் கண்டான்" எனக் குறிப்பிடுகிறார்.*

**உளிக்கருப்பன்**

*நடுகல் வழிபாடு அகால மரணத்துடன் தொடர்புடையது ஒரு வகையில் இது வீரத்தைக் காட்டி இறந்த ஆண்களுக்கு எழுப்பப்பட்ட வழிபாடு கொல்லப்பட்டவரின் உடம்பின் மேல் தழைகளை அடையாளமாயிப் போடுவது பின்னர் அதே இடத்தில் கல் நடுவது என்பது இதனை*

***"ஏறுபடை இன நிரை பெயர, பெயராது***
***சேறி கரை வெல் வேல் மழவர்த் தாங்கிய***
***தறுகைணாளர் நல் இசை நிறமார்***
***பிடி மடிந்தன்ன குறும்பொறை மருங்கின்***
***நட்ட போலும் நடரஅ நெடுங்கல்***
***.....................***
***இளையர் பதிர் பெயரும் அருஞ்சுரம்***
***இறந்தோர்"***

*எனும் அகநானூற்றுகளில் காணலாம் அதாவது வெட்சிப் பூச்சூடி அவற்றை மீட்டு வந்த அஞ்சா நெஞ்சம் படைத்த தறுகண் மழவனுக்கு கல்லைக் குடைந்து நடுகல் அமைப்பார் அந்த தறுகனாலின் ஆனிரை கவர்வோர் முன் அஞ்சாது யதிர்த்து நின்று மாண்டவன் வீசும் வேல்களைக் கரையில் மாட்டிக் கொண்டு எதிர்த்து போரிட்டவன் அவன் பெயரை நிலை நிறுத்துவதற்காக நடுகல் பொறிக்கப்பட்டது செத்துக் கிடக்கும் யானை போன்ற பெரிய பாறையில் பொறிக்கப்பட்டது. இது நட்டது போன்று நடப்படாத உயர்ந்த கல் .... அதனை நீர் ஊற்றிக் குளிப்பாட்டுவர் மணக்கும் மஞ்சளை ஈரத்தோடு பூசுவான் என்பதாகும்.*

*மேற்கண்ட அகநானூறு வீர மரணம் எய்தி நடுகல்லாகிப் போன வீரனைப்பற்றியும் அவனுக்கு செய்யப்படும் வழிபாடு பற்றியும் கூற சோ. தர்மன் அவர்களோ ஒரு பெண்ணை ஏமாற்றி அவளால் மரணிக்கப்பட்ட கருப்பன் நடுகல்லாகி உளிக் கருப்பனாக வணங்கப்படுகிறான் என்பதை குறிப்பிடுகின்றார். நங்கிரியானின் மகளாக மாதாயயை குமராண்டி மகன் கருப்பன் பாலியலக்கு உட்படுத்தப்படுகிறான். இதனால் கர்ப்பமாகிப்போன மாதாயி நீதி கேட்க, மாதாயி வயிற்றில் வளரும் குழந்தைக்குத் தான் காரணமில்லை என்று ஒதுங்கிக் கொள்கிறான் கருப்பன் தன் குழந்தைக்கு கருப்பன் தான் தந்தை என்றாலும் ஒத்துக் கொள்ளாத கருப்பன் மேல் கடும் கோபத்திலிக்கிறான் மாதயி நிறைமாத கர்ப்பிணியான மாதாயி ஒரு நாள் கருப்பனை கொலை செய்ய திட்டம் தீட்டுகிறாள் இதனை*

*".......... கருப்பன் மூன்றாவது ஆளாய் வருவதை உறுதி செய்து கொண்டான் உளியின் கைப்பிடியை இறுக்கிப் பிடித்தாள் மரத்தின் கிட்டத்தில் வந்தவுடன் ஒரே பாய்ச்சலில் பாயந்து உளியாள் கழுத்தில் வெட்டினாள். அவள் போட்ட வெறிக் கூச்சலில் அடைந்து கிடந்த பறவைகள் இறக்கையடித்துப் படபடத்தன. உடன் வந்நவர்கள் ஓட்டம் பிடித்து இருட்டுக்குள் மறைந்தனர். கழுத்து தொங்க தரையில் சாய்ந்தான் கருப்பன்" என்ற பகுதியில் சுட்டுகின்றார்*

*ஆசிரியர். கருப்பன் உளியால் கொல்லப்பட்டதால் அந்த இடத்தில் அவன் நினைவாக கோயில் உருவாக்கப்பட்டது. மாதாயி உளியால் கருப்பனை கொன்ற இடத்தில் உருவான கோயிலே உளிக் கருப்பன் கோயிலாகும். இக்கோயிலின் தோற்றத்தை சோ. தர்மன் அவர்கள்*

***"நான்கு பக்கமும் நான்கு கல்தூண்கள்***
***கூம்பு வடிவில்***
***கூரையைத் தாங்கியபடி இதே போல்***
***சிலையொன்று***
***எதுவும் கிடையாது உளி வடிவத்தில்***
***செதுக்கப்பட்ட***
***ஒரு கல் ஒட்டி வைக்கப்பட்டிருக்கும் ...... கோவிலின்***
***இடது புறம் சுமைதாங்கி கல்"***

*எனக் கூறுகின்றார். இந்த உளிக்கருப்பன் கோவில் மேற்கண்ட அகநானூற்றுப் பாடலில் (269:3-13) குறிப்பிட்டது போன்று வீரத்தோடு தொடர்பு கொண்டது.*

***"அவமானத்தின் பலன அறிவித்து நிற்கிறது"***

*என்கின்றார் சோ. தர்மன் அவர்கள். கருப்பனை கொலை செய்துவிட்டு மரணம் எய்திய மாதாயும் கடவுளாய்க் காட்சி தருவதை*

***"சுமை தாங்காங்கியால் நிறை சூலியாய்***
***மாதாயி தவமும்***
***குழந்தையாய் ஒரு சிசுவின் உருவம்"***

*எனும் வரிகள் புலப்படுத்தும்.*

**முடிவுரை**

*தமிழகப் பண்பாடு வரலாறு ஆய்வுக்கு முக்கியமாக நாட்டுப்புற ஆய்வு துணையாக அமைகிறது என்பது பெரும்பான்மையான வரலாற்று ஆய்வாளர்கள் ஒப்புக் கொண்ட உண்மையாகும். நாட்டுப்புறத் தெய்வங்கள் தமிழகத்தில் வாழ்ந்து மடிந்த முன்னோர்களேயாவார். சோ. தர்மனின் புதினங்களிலும் முன்னோர்களையே நாட்டுப்புறத் தெய்வங்களாகவே கூறியுள்ளார். இத்திராவிடத் தெய்வங்கள் பெரும்பாலும் பெண் தெய்வங்களாக குறிக்கப்பட்டுள்ளன. இப்பெண் தெய்வங்களைக் கொண்டாடும் கிராமத்து வாழ்க்கையைப் பொதுவாக நாட்டுப்புற வாழ்க்கை என்பது ஆய்வாளர்களின் முடிவாகும்.*

**துணைநூல் பட்டியல்**


1. *பெருமாள், அ. கா. பழந்தமிழர் வழிபாட்டு மரபுகள். நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 2018.*
2. *தர்மன், சோ. பதிமூன்றாவது மையவாடி. மெய்யப்பன் பதிப்பகம்.*
3. *தர்மன், சோ. சூழ். மெய்யப்பன் பதிப்பகம்.*
4. *தர்மன், சோ. கூகை. மெய்யப்பன் பதிப்பகம்.*
5. *தர்மன், சோ. தூர்வை. மெய்யப்பன் பதிப்பகம்.*


**References**


1. Perumal, A. K. *Ancient Tamil Worship Traditions*. New Century Book House, 2018.
2. Dharman, C. *The Thirteenth*. Meiyyappan Publications.
3. Dharman, C. *Surrounding*. Meiyyappan Publications.
4. Dharman, C. *The Owl*. Meiyyappan Publications.
5. Dharman, C. *The Bucket*. Meiyyappan Publications.